பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 06 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஸ்ரீநாராயண குரு – மகாத்மா காந்தி இடையேயான வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையாடலின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

2. வாரணாசியில் இன்று நடைபெறும் மத்திய மண்டல கவுன்சில் கூட்டத்திற்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமை தாங்குகிறார்.

3. தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் நலத்திட்டங்களால் நாடு முழுவதும் 26 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

4. தீவிரவாதத்தை அதன் அனைத்து வடிவிலும் எதிர்க்க வேண்டியது அவசியம் என்று சீன அமைச்சரிடம் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் வலியுறுத்தியுள்ளார்.

5. அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

ஸ்ரீநாராயண குரு – மகாத்மா காந்தி இடையேயான வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையாடலின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

புதுதில்லி விஞ்ஞான்பவனில் நடைபெறும் இதற்கான நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்று, உரையாற்ற உள்ளார்.

நாட்டின் மிக பிரபலமா ஆன்மிக மற்றும் அரசியல் தலைவர்களுக்கு இடையேயான கலந்துரையாடல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

கடந்த 1925ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் தேதி மகாத்மா காந்தி, சிவகிரி மடத்திற்கு சென்று ஸ்ரீநாராயணகுருவுடன் உரையாடிய நிகழ்வு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

வைக்கம் சத்தியாகிரகம் உள்ளிட்ட பல்வேறு அகிம்சை மற்றும் ஆன்மிக விஷயங்கள் இந்த உரையாடலில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, வாரணாசியில் இன்று நடைபெறும் மத்திய மண்டல கவுன்சில் கூட்டத்தில் தலைமை ஏற்று உரையாற்றவுள்ளார்.

இரண்டு நாள் பயணமாக அவர் நேற்று வாரணாசி சென்றடைந்தார்.

உள்துறை அமைச்சகத்தின் மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சிலும், உத்தரப்பிரதேச மாநில அரசும் இணைந்து இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளது.

மத்திய மண்டல கவுன்சிலில் இடம்பெற்றுள்ள மாநிலங்களின் முதலமைச்சர்களான திரு. யோகி ஆதித்யநாத், திரு. புஷ்கர் சிங் தாமி, திரு. மோகன் யாதவ், திரு. விஷ்ணு தியோ சாய் மற்றும் உயரதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கிறார்கள்.

மத்திய அரசுக்கும், மாநிலங்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவது தொடர்பாகவும், உறுப்பு மாநிலங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மத்திய அரசின் நலத்திட்டங்களால் நாடு முழுவதும் 26 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக மத்திய நுகர்வோர் நலத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

பீஹார் மாநிலம் **Khagaria**-வில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் உறுதியாக நடைமுறைப்படுத்தப்படுவதன் காரணமாக மக்கள் முன்னேற்றம் அடைந்திருப்பதாக கூறினார்.

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ் 3 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்தப்பட்டிருப்பதை திரு. பிரல்ஹாத் ஜோஷி சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

ஈரானும் - இஸ்ரேலும் முழுமையான சண்டை நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த சண்டை நிறுத்தம் உடனடியாக அமலுக்கு வர இருப்பதாக கூறியுள்ளார்.

கத்தாரில் உள்ள அமெரிக்க விமான படைத்தளத்தின் மீது ஈரான் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்திய நிலையில், திரு. ட்ரம்ப் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

படிப்படியாக சண்டை நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், முதலில் ஈரான் தாக்குதலை நிறுத்தும் என்றும், அதைத் தொடர்ந்து 24 மணி நேரத்தில் இஸ்ரேலும் சண்டை நிறுத்தத்தை அமல்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் கடந்த 12 நாட்களாக நடைபெற்று வந்த ஈரான் - இஸ்ரேல் இடையேயான போர் முடிவுக்கு வர இருப்பதால் உலக நாடுகள் இதனை வரவேற்றுள்ளன.

முன்னதாக கத்தாரில் உள்ள அமெரிக்க ராணுவ தளம் மீது ஈரான் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

சில ஏவுகணைகள் இடைமறிக்கப்பட்ட போதிலும் 3 ஏவுகணைகள் இலக்கை தாக்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து கத்தாரில் உள்ள அமெரிக்கர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அமெரிக்க தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

இதேபோல் அங்குள்ள இந்தியர்களும் பாதுகாப்பாக வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு இந்திய தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஈரான் தாக்குதல் நடத்த இருப்பதாக வெளியான தகவலையடுத்து, கத்தார் வான்பரப்பை மூடுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் தோஹா செல்லும் விமானங்கள் அனைத்தும் திருப்பி அனுப்பப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இப்போதைக்கு போர்நிறுத்தம் குறித்த முடிவு எடுக்கப்படவில்லை என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இஸ்ரேல் மீதான தாக்குதலை தற்காலிமாக நிறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கத்தாரில் உள்ள அமெரிக்க விமான தளத்தின் மீது ஈரான் நடத்திய பதிலடி தாக்குதலையடுத்து, உலக அளவில் கச்சா எண்ணெய் விலை 5 ஆண்டுகளில் இல்லாத வகையில் பீப்பாய் ஒன்றுக்கு 5 டாலர் குறைந்துள்ளது.

முன்னதாக கடந்த வார இறுதியில் மத்திய கிழக்கு பகுதியில் பதற்றம் அதிகரித்ததால் கச்சா எண்ணெய் விலை அதிகரிக்கத் தொடங்கியது.

எரிசக்தி சந்தையில் ஸ்திரமற்ற சூழல் நிலவியதால் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரிக்கும் சூழல் உருவான நிலையில் தற்போது குறைந்திருப்து குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

தீவிரவாதத்தை அதன் அனைத்து வடிவிலும் எதிர்க்க வேண்டியது அவசியம் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் கூறியுள்ளார்.

சீன தலைநகர் பெய்ஜிங் சென்றுள்ள அவர், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Wang Yi**-யை நேற்று சந்தித்துப் பேசினார்.

அப்போது ஆசிய பிராந்தியத்தில் ஒட்டுமொத்த அமைதியையும், ஸ்திரத்தன்மையையும் பராமரிப்பதற்கு தீவிரவாத எதிர்ப்பு நிலைப்பாடு அவசியம் என்று திரு. அஜித் தோவல் உறுதிபட தெரிவித்ததாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த சந்திப்பின்போது இந்தியா – சீனா இடையேயான இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் அதனை மேம்படுத்துவது குறித்து சீன அமைச்சருடன் திரு. அஜித் தோவல் விவாதித்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் பரஸ்பர பலன் அளிக்கக்கூடிய உலகளாவிய பிரச்சினைகளை அவர்கள் பரிமாறிக்கொண்டதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது..

<<<<>>>>

தமிழகத்தின் திருவள்ளூர் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டு வரும் மத்திய அரசின் திட்டங்கள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் துறைசார்ந்த அலுவலர்கள் பங்கேற்று திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆலோசித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்து வாயிலாக நேற்று வரை 290 இந்தியர்களும், இலங்கையை சேர்ந்த ஒருவரும், **Mashhad** நகரில் இருந்து சிறப்பு விமானம் மூலம் புதுதில்லி அழைத்து வரப்பட்டனர்.

இவர்களையும் சேர்த்து ஈரானில் இருந்து மொத்தம் 2 ஆயித்து மூன்று இந்தியர்கள் பாதுகாப்பாக தாயகம் அழைத்து வரப்பட்டிருப்பதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

இதனிடையே 161 இந்தியர்கள் அடங்கிய முதல் குழுவினர் ஜோர்டான் நாட்டின் அம்மான் நகரில் இருந்து சிறப்பு விமானத்தில் இன்று புதுதில்லி வரவுள்ளனர்.

அவர்கள் இஸ்ரேலில் இருந்து சாலை மார்க்கமாக அம்மான் அழைத்து வரப்பட்டு அங்கிருந்து விமானத்தில் புறப்பட்டிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாட்டின் வடமேற்கு பகுதிகளில் நாளை முதல் கனமழை முதல் அதிகனமழை வரை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்திய மாநிலங்கள், கிழக்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த 7 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

மத்தியப்பிரதேசத்தின் மேற்கு பகுதியில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழை காரணமாக வடக்கு அரபிக்கடல் பகுதியை ஒட்டியுள்ள மாநிலங்கள், ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானாவின் சில பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

இந்தியாவின் முன்னணி வீரர்களான கிடாம்பி ஸ்ரீகாந்த், ஆயுஷ் ஷெட்டி, ப்ரியன்ஷு ரஜாவத் ஆகியோரும், மகளிர் பிரிவில் ஆகர்ஷி காஷ்யப், தான்வி ஷர்மா, **Anmol Kharb** உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.

------------

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற 371 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**'Leeds'-**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் நான்காம் நாள் ஆட்ட நேர இறுதியில் இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 21 ரன் எடுத்துள்ளது.

ஐந்தாம் நாள் ஆட்டம் இன்று தொடர்ந்து நடைபெற உள்ள நிலையில், அந்த அணி வெற்றி பெற 350 ரன்கள் தேவை.

முன்னதாக இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் 364 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியா முதல் இன்னிங்சில் 471 ரன்கள் எடுத்திருந்த நிலையில், இங்கிலாந்து 465 ரன் எடுத்தது.

**<<<<The End>>>>**